A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. செ.தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 01 / 2022**

திரு. P. மண்ணாங்கட்டி,
த/பெ. பொன்னுசாமி,
சாராயக்கடை மேடு,
கடலூர் மெயின்ரோடு,
கண்ணாரம்பட்டு அஞ்சல்,
திருவெண்ணைநல்லூர் தாலூக்கா,
விழுப்புரம் – 607 203.

………மேல்முறையீட்டாளர்
(திரு. P. மண்ணாங்கட்டி)

எதிர்

செயற்பொறியாளர்/ இ&ப/உளுந்தூர்பேட்டை,
கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
Ms தக்கா, உளுந்தூர்பேட்டை – 606 107.

…… எதிர்மனுதாரர்
(திரு R. சர்தார், செயற்பொறியாளர்/ இ&ப/உளுந்தூர்பேட்டை)

**மனு பெறப்பட்ட நாள்: 03-01-2022**

**கேட்புரை நாள்: 02-03-2022 & 17-03-2022**

**ஆணை நாள்: 18-05-2022**

03.01.2022 அன்று பெறப்பட்ட திரு. P. மண்ணாங்கட்டி, த/பெ. பொன்னுசாமி, சாராயக்கடை மேடு, கடலூர் மெயின்ரோடு, கண்ணாரம்பட்டு அஞ்சல், திருவெண்ணைநல்லூர் தாலூக்கா, விழுப்புரம் – 607203 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 01/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீப்பாளரின் கேட்புரை 02.03.2022 மற்றும் 17.03.2022 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின்

பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

புல எண்.37/2–இல் அமைந்துள்ள ஆழ்துளை கிணற்றுக்கு 5 குதிரை திறன் விவசாய மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணபித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 மேல்முறையீட்டாளரின் சொந்தமான புல எண்37/2–இல் அமைந்துள்ள ஆழ்துளை கிணற்றுக்கு 5 குதிரை திறன் விவசாய மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணபித்துள்ளார்.

2.2 மேற்கண்ட விண்ணப்பத்திற்கு மின் இணைப்பு வழங்க தயார் நிலையினை பதிவு செய்ய கோரி அறிவிப்பு கடிதம் பதிவு தபாலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பப்பட்டதாகவும், உரிய காலத்திற்குள் தயார் நிலை பதிவிட தவறியதால் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் காலவதியாகிவிட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே தனது கிணற்றிற்கு விவசாய மின் இணைப்பு வேண்டி கள்ளக்குறிச்சி மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், சென்னை கள்ளக்குறிச்சி வட்டம், 21.10.2021 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

### 3.0 மன்றத்தின் தீர்வு:

கள்ளக்குறிச்சி மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 21.10.2021 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"**மன்றத்தின் தீர்வு**:*

*விவசாய விண்ணப்ப எண். 617A நாள் 21.01.91 திரு. P.மண்ணாங்கட்டி, த/பெ பொன்னுசாமி கவுண்டர், மெயின்ரோடு, சாராயகரைமேடு, அவர்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விண்ணப்பத்திற்கு தயார்நிலை நோட்டீஸ் க.எண்.செ.பொ/இ&ப/உ.பே/கோ.விவசாயம்/எண்.617A-1/10, நாள்: 30.10.2010-இன் மூலம் வழங்கப்பட்டு தயார் நிலை நோட்டீஸ் காலாவதிக்கு முன்னர்வரை விண்ணப்பதாரர் தயார்நிலை பதிவுசெய்யவில்லை. மேலும், காலநீட்டிப்பு வேண்டி எவ்வித மனுவும் அளிக்கவில்லை. கடந்த 31.10.2017 அன்று அலுவலகத்தை அணுகியுள்ளார். இந்நிலையில் மனுதாரருக்கு வாரிய விதிகளின்படி மின் இணைப்பு வழங்க இயலாது என்பதை செயற்பொறியாளர்/இ&ப/உளுந்தூர்பேட்டை அவர்கள் தெளிவுபட கூறியுள்ளார், இருப்பினும் மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் முதலமைச்சரின் தனிப்பிரிவு மற்ற வழி மனுக்களை அனுப்பியுள்ளார். இம்மனுக்கள் அனைத்திற்கும் செயற்பொறியாளர் / இ&ப/உளுந்தூர்பேட்டை அவர்கள் பதிலுரை அனுப்பியுள்ளார் புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப பணப்பிரிவத்தனை தொர்பாக தனியே ஒரே விசாரணை அதிகாரி நியமிக்கப்பட்டு, அவரின் தரப்பு கோரிக்கையை தெரிவிக்க வாய்ப்பு அளிக்கப்பட்டும், மனுதாரர் ஆஜராகவில்லை. மேலும் மின்நுகர்வோர் குறைதீர்ப்பு மன்றத்திற்கு மனு அளித்துள்ளதற்கு முறையான அழைப்பாணை அனுப்பப்பட்டும் அவர் கலந்து கொள்ளவில்லை.*

*மேற்படி காரணங்களையும், நடவடிக்கையும் உற்று நோக்கும் போது மனுதாரர் மனு அளிப்பதை வாடிக்கையாக கொண்டுள்ளது தெளிவாகிறது. மேலும் மனுதாரரின் விண்ணப்பத்திற்கு 30.10.2010-ல் தயார்நிலை நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. அதற்கு அவர் தயார் நிலை பதிவு செய்ய முன்வராத காரணத்தினாலும் உரிய காலத்தில் காலநீட்டிப்பு வேண்டி மனு செய்யாததாலும் நோட்டீஸ் வழங்கிய பின்னர் மனுதாரர் பிரிவு அலுவலகத்தை தொடர்பு கொள்ளும் நாளான 31.10.2017 அன்று வாரிய விதிகளின்படி 90 நாள் நோட்டீஸ் வழங்கி 5 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால் தயார் நிலை பதிவு செய்ய இயலாது என்பதாலும், மனுதாரர் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு முடிவுக்கு கொண்டுவரப்படுகிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 02.03.2022 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்ட போது மேல்முறையீட்டாளர் கலந்து கொள்ளாத காரணத்தினால் மேல்முறையீட்டாளருக்கு மேலும் ஒரு வாய்ப்பு தரும் பொருட்டு 17.03.2022 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு. P. மண்ணாங்கட்டி அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொள்ளவில்லை.

4.3 எதிர்மனுதாரர் திரு R. சர்தார், செயற்பொறியாளர்/ இ&ப/உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி மின்பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் மேற்கண்ட முகவரியில் வசித்து வருவதாகவும், தனக்கு சொந்தமான நிலம் கிராம எல்லை திருமூண்டிச்சாரம் எல்லை அ.பு.அ.ந.ஆக.ஏ4.00 தனி தனியாக உள்ளதாகவும், இவற்றிற்கு மோட்டார் சர்வீஸ் கேட்டு 21.1.1991–இல் பதிவு எண் 617 ஆக பதிவு செய்யப்பட்டதாகவும், ஆனால் திருவெண்ணைநல்லூர் EB டவுன் ஆபிஸில் கொடுத்து எல்லா ஆவணங்களையும். 22.3.2013–இல் ஒப்படைத்ததாகவும், ஆனால் சர்வீஸ் வரவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 அதன் பிறகு உதவி செயற்பொறியாளர்/உளுந்தூர்பேட்டை, செயற்பொறியாளர் மற்றும் மேற்பார்வை பொறியாளர்/கள்ளக்குறிச்சி ஆக 6 அலுவலகங்களுக்கு மனு கொடுத்ததாகவும், ஆனால் தனக்கோ படிப்பறிவு இல்லை, கடிதமும் படிக்க, விளக்க தெரியாது எனவும், இந்த நேரத்தில் கடந்த 2010 ஆண்டு (30–10–2010)இல் 90 நாளில் பதிவு செய்ய சொல்லி கால அவகாசம் கொடுத்ததாகவும், அதிக விபரம் தெரியாமல் தவறவிட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 அதன்பிறகு 22.3.2013–இல் மறு உத்திரவு கொடுத்து அதற்கு பதிவுகளை அனைத்து ஆவணங்களையும் திருவெண்ணைநல்லூர் டவுன் அலுவலகத்தில் ஒப்படைத்ததாகவும், ஆனால் அவர்கள் தனது மனு மற்றும் ஆதாரங்களை மனகசப்புடன் மேல் நடவடிக்கைக்கு அனுப்பவில்லை. இதனால் தனக்கு இந்த ஒரு கால அவகாசம் நீட்டிப்பு செய்து தாங்கள் என்னென்ன ஆதாரங்கள் வேண்டுமோ– மீண்டும் தர சம்மதிப்பதாகவும், அதனால் இந்த மனுவுடன் இதற்குமுன் உள்ள 22.3.2013–இல் தபால் இணைக்கப்பபட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 திரு. மண்ணாங்கட்டி த/பெ. பொன்னுசாமி சாராயக்கடைமேடு, கடலூர் மெயின் ரோடு, கண்ணாரம்பட்டு அஞ்சல், திருவெண்ணைய்நல்லூர் தமக்கு சொந்தமான திருமூண்டிச்சரம் மதுாரா சாரய மேடு கிராமம் புல எண்.37/2–இல் அமைந்துள்ள ஆழ்துளை கிணற்றுக்கு 5 குதிரை திறன் விவசாய மின் இணைப்பு வேண்டி சாதாரண முன்னுரிமை திட்டத்தில் விண்ணப்பம் பதிவு எண்.617 நாள்.21.01.1991–இல் விண்ணப்பித்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 இவிண்ணப்பத்திற்கு மின் இணைப்பு வழங்க தயார் நிலையினை பதிவு செய்ய கோரி அரசு இலக்கிட்டிற்கேற்ப 30.10.2010 நாளிட்ட அறிவிப்பு கடிதம் பதிவு தபாலில் அனுப்பப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் இவ்வறிப்பு கடிதத்தை பெற்றுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 அறிவிப்பில் 20.11.2010 ஆம் தேதிக்குள் வருவாய் ஆவணங்களை பிரிவு பொறியாளரிடம் சமர்ப்பித்து ஒப்புதலை பெற்றபின் 03.12.2010 தேதிக்குள் மோட்டார், பம்பு செட்டு கெப்பாசிட்டர் ஆகிய உபகரணங்களை வாங்கி வைத்து தங்கள் தயார் நிலையினை பிரிவு பொறியாளர்/நகரம்/திருவெண்ணைய்நல்லூர் அவர்களின் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தயார் நிலை பதிவேட்டில் மேற்கூறிய தகவல்களுடன் பதிவு செய்து கொள்ள அறிவிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேலும் அவ்வாறு தாங்கள் தயார் நிலையினை மேற்குறிப்பிட்ட தேதிக்குள் பதிவு செய்யாவிடில் இத்திட்டத்தில் மின் இணைப்பு வழங்க இயலாது எனவும் கூடுதலாக 30 நாட்கள் கால அவகாசம் தேவையெனில் 03.12.2010 ஆம் தேதிக்குள் கால அவகாசம்

கோரி விண்ணப்பித்தால் மட்டுமே அதனை பரிசீலித்து கால அவகாசம் அளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 எனினும் மனுதாரர் உரிய காலத்திற்குள் வருவாய் ஆவணங்களை பிறப்பிக்க தவறிவிட்டார், மேலும் மோட்டார், பம்பு செட்டு, கெப்பாசிட்டர் ஆகிய உபகரணங்களை வாங்கி விவரங்களை உரிய காலத்திற்குள் தமது தயார் நிலையினை பிரிவு அலுவலகத்தில் பதிவு செய்ய தவறிவிட்டதாகவும், கால அவகாசம் வேண்டி உரிய காலத்திற்குள் அறிவிப்பில் கண்டவாறு மனு ஏதும் அளிக்கவில்லை எனவும், உரிய காலத்திற்குள் தயார் நிலை பதிவிட தவறியதால் அன்னாரின் விண்ணப்பம் காலாவதியாகிவிட்டதாகவும், எனவே இவ்விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை தொடர இயலாது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 அவ்வாறான சூழ்நிலையில் மனுதாரர் இப்பொருள் தொடர்பாக தொடர்ந்து மனு எழுதுவதை வாடிக்கையாக கொண்டுள்ளதாகவும், கடந்த அக்டோபர் 2020–இல் கள்ளக்குறிச்சி மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கும் மனு செய்து எண்.004/2020–21 நாள் 16.08.2021 பதிவாகி மின் நுகர்வோர் குறைதீர் மன்றம் நாளது 21.10.2021 அன்று மனுவினை விசாரனைக்கு எடுத்து மனுதாரர் அக்கூட்டத்தில் கலந்துகொள்ளாததால் மனுவில் அன்னாரின் குறைப்பாட்டிற்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் நேரடியாக இக்குறைதீர் மன்றத்தில் ஆஜராகி தமது குறையினை தீர்க்கும் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 மனுதாரர் கள்ளக்குறிச்சி மின் குறைதீர் மன்றத்தின் தீர்ப்பு எவ்வகையிலும் தமக்கு திருப்தி அளிக்கவில்லை என மேல் முறையீட்டு மனுவில் தெரிவிக்கவில்லை. கடந்த 2010–ஆம் ஆண்டு வழங்கிய அறிவிப்புக்கு 11 ஆண்டுகள் கடந்து தற்போது இம்மேல்முறையீட்டு மனுவில் கால அவகாசம் கோரியுள்ளதாகவும், விண்ணப்பம் காலாவதியாகி விட்டபடியால் அன்னாரின் கோரிக்கை பரிசீலனைக்கு உகந்ததல்ல என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 எனவே அன்னாரின் மேல்முறையீட்டு மனு அறிவிப்பில் காணும் விதிகளின்படி உரிய காலத்திற்குள் தமது தயார் நிலையினை பதிவு செய்ய தவறிய காரணத்தினால்

இசைவிணக்கம் காண இயலாத நிலையில் இம்மேல்முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்யுமாறு எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு:</u>**

**7.1** மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் இருதரப்பினராலும் கேட்புரையின்பொழுது எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(i) விவசாய மின்இணைப்பு கோரும் விண்ணப்பதாரர்கள் அவர்களது தயார்நிலையை பதிவு செய்துகொள்ள 90 நாட்களுக்கு மேல் அனுமதிக்கப்படும் கால அவகாசம் எவ்வளவு ?

(ii) மேல்முறையீட்டாளர் அவருடைய தயார்நிலையை அனுமதிக்கப்பட்ட காலகெடுவுக்குள் பதிவு செய்துள்ளாரா ? இல்லையெனில் நிவாரணம் வழங்கமுடியுமா?

**8.0 <u>வழக்கெழு வினா ஒன்றிற்கான தீர்வு:</u>**

**8.1** விவசாய மின் இணைப்புகளை பொருத்தவரையில், தயார் நிலையை பதிவு செய்வது சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார வழங்கல் விதி (Supply Code) மற்றும் பகிர்மான விதி தொகுப்பு (Distribution Code) தொகுப்பில் எதுவும் கூறப்படவில்லை. எனவே, உரிமம்தாரர் கூறிய விதிகளைத்தான் பின்பற்ற வேண்டும்.

**8.2** எதிர்மனுதாரர் விவசாய மின் இணைப்பு கேட்கும் விண்ணப்பதாரர்கள் தங்களின் மனுவின் பேரில் தயார் நிலையை பதிவு செய்ய கொடுக்கப்பட்டுள்ள 90 நாட்கள் முடிந்த 5 வருடங்கள் வரை, தயார்நிலையை பதிவு செய்யலாம் என்று தலைமை பொறியாளர் திட்டமிடல் அவர்களின் 22.9.2009 நாளிட்ட கடிதத்தில் கூறப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். அந்த ஆணையின் தேவையான பத்திகளின் உண்மை நகல் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

> *"1. In cases of delay in reporting readiness of agricultural applications even beyond the extended period of one year, extension of time may be given to the original applicant/ legal heirs, as the case may be for entering readiness upto 5 years from the date of expiry of 90 days notice period once the party has attained the normal seniority. However, this should not be applicable to purchaser of the land who purchases the land after expiry of 90 days notice.*

*2. The applications which were kept pending (except court case/ dispute case) after completing 5 years from the date of expiry of 90 days notice period may be cancelled and intimated to the applicant.*

*3. Cancelled applications need not be revoked.*

*4. Applicants whose applications released / readiness entered, but supply was not availed due to court case / dispute supply may be effected without any time limit, if the case is ended in favour of the applicant on priority. The receipt of this letter may be acknowledged."*

**8.3** மேற்கண்ட ஆணையினை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது ஒரு விவசாய மின் இணைப்பு வேண்டும் விண்ணப்பதாரர் தன்னுடைய தயார் நிலையை, ஏற்கனவே வழங்கப்பட்ட ஒருவருட கால அவகாச நீட்டிப்பிற்கு பின்பும் விண்ணப்பதாரர் / விண்ணப்பதாரரின் வாரிசுக்கு தங்களது தயார் நிலையை பதிவு செய்ய **90** நாட்கள் அறிவிப்பு கடிதத்தின் காலக்கெடு முடிந்த **5** வருடங்கள் வரை காலநீட்டிப்பு வழங்கலாம் என்று தெரிகிறது. மேலும் இது சாதாரணவரிசையிலுள்ள (Normal) பதிவு மூப்பின்படி வழங்கப்படும் அறிவிப்புகளுக்குத்தான் பொருந்தும். மேலும் மேற்கண்ட விதி, தயார் நிலையை பதிவு செய்யக்கோரி விடுத்த அறிவிப்பின் **90** நாட்கள் கடந்த பின்பு மேற்கண்ட நிலத்தை வாங்கியவர்களுக்கு பொருந்தாது என்றும் தெரிகிறது (**13.12.2010** நாளிட்ட ஆணையின்படி, மேற்கண்ட கால அவகாசம் நிலத்தை வாங்கியவர்களுக்கும் பொருந்தும் என்று தெரிகிறது). மேலும் **90** நாட்கள் அறிவிப்பு கடிதம் கொடுக்கப்பட்டு **5** வருடங்கள் கழிந்த விவசாய விண்ணப்பங்கள் ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் அவ்வாறு ரத்து செய்த விவரம் விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் தெரிகிறது. ரத்து செய்யப்பட்ட விண்ணப்பங்கள் திரும்ப எடுத்துக்கொள்ள முடியாது என்றும் தெரிகிறது.

**8.4** மேற்கண்ட தலைமை பொறியாளர் / திட்டமிடல் **22.9.2009** நாளிட்ட ஆணையின்படி, விவசாய விண்ணப்பங்களின் சாதாரண வரிசையின் மூப்பு அடிப்படையில் தயார் நிலையை பதிவு செய்ய கோரி கொடுக்கப்பட்ட அறிவிப்பிலுள்ள காலக்கெடுவான **90** நாட்கள் முடிந்த நாளிலிருந்து ஐந்து வருடங்கள் வரை, விண்ணப்பதாரர் அல்லது அவரின் வாரிசுகள் தங்கள் தயார்நிலையை பதிவு செய்துகொள்வதற்கு கால அவகாசம் வழங்க வாரிய விதிகளில் இடமுண்டு என்று தெரிகிறது.

**9.1 <u>வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு:</u>**

9.1 **மேல்முறையீட்டாளர் தனக்கு சொந்தமான திருமூண்டிச்சாரம் மதுரா சாராயமேடு கிராமம் புல எண். 37/2ல் விவசாய மின்னிணைப்பு வேண்டி 21.01.1991–இல் விண்ணப்பம் செய்து அது பதிவு எண் 617 ஆக பதிவு செய்யப்பட்டதாகவும்**

தெரிவித்துள்ளார். மேலும் கடந்த 2010–ஆம் ஆண்டு (30.10.2010)–இல் 90 நாளில் பதிவு செய்ய சொல்லி கால அவகாசம் கொடுத்ததாகவும், ஆனால் தனக்கு படிப்பறிவு இல்லாததாலும் எந்த விவரமும் தெரியாமல் தவறவிட்டதாக தெரிவித்துள்ளார். அதன்பிறகு 22.03.2013–இல் மறு உத்திரவு கொடுத்து அதற்கான அனைத்து ஆவணங்களையும் திருவெண்ணெய் நல்லூர் EB டவுன் ஆபிஸில் ஒப்படைத்ததாகவும், ஆனால் ஆவர்கள் மேல் நடவடிக்கைக்கு தன்னுடைய மனுவை அனுப்பவில்லையென்று தெரிவித்துள்ளார்.

9.2 எதிர்மனுதாரர் தன்னுடைய வாதத்தில் மேல்முறையீட்டாளரின் விண்ணப்ப பதிவு எண் 617–ற்கு 30.102010 அன்று தயார்நிலை பதிவு செய்ய அறிவிப்பு கடிதம் பதிவு தகாலில் அனுப்பப்பட்டு மேல்முறையீட்டாளர் இவ்வறிவிப்பு கடிதத்தை பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அறிவிப்பில் 20.11.2010–ஆம் தேதிக்குள் வருவாய் ஆவணங்களை பிரிவு பொறியாளரிடம் சமர்ப்பித்து ஒப்புதலை பெற்றபின் 3.12.2010 தேதிக்குள் மோட்டார், பம்பு செட்டு கெப்பாசிட்டர் ஆகிய உபகரணங்களை வாங்கியபின் பிரிவு அலுவலகத்தில் தயார்நிலை பதிவேட்டில் பதிவு செய்து கொள்ள அறிவுறுத்தியதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் கால அவகாசம் கோரி உரிய காலத்திற்குள் விண்ணப்பிக்கவில்லையென்றும் தெரிவித்துள்ளார்.

9.3 இந்த வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள விவசாய மின்னிணைப்பு கோரும் விண்ணபத்தின் பதிவு எண் 617, நாள் 21.01.1991 ஆகும். மேற்கண்ட விண்ணபத்திற்கு தயார்நிலை பதிவு செய்ய கோரி 90 நாள் அறிவிப்பு கடிதம் 30.10.2010 அன்று எதிர்மனுதாரர் அனுப்பப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பின்படி தயார்நிலை பதிவு செய்ய கடைசி நாள் 28.01.2011 ஆகும்.

**9.4** என்னுடைய முதல் வழக்கெழு வினாவிற்கான தீர்வின்படி தயார்நிலையை பதிவு செய்ய கொடுக்கப்பட்ட **90** நாட்கள் அறிவிப்பின் காலக்கெடுவான **90** நாள் முடிந்த நாளிலிருந்து **5** வருடங்கள்வரை கால அவகாசம் வழங்கலாம். அதாவது **28.01.2016** வரை விவசாய மின் இணைப்பு கோரியுள்ள விண்ணப்பதாரர் தன்னுடைய தயார்நிலையை பதிவு செய்ய கால அவகாசம் உள்ளது என்று தெரிகிறது.

9.5 ஆனால் மேல்முறையீட்டாளர் 28.01.2011 வரை தன்னுடைய தயார் நிலையை பதிவு செய்யவில்லை மற்றும் கால அவகாசம் கோரியும் மனு எதுவும் சமர்ப்பிக்கவில்லை என்று தெரிகிறது. எனவே, 90 நாள் அறிவிக்கையில்

அனுமதிக்கப்பட்ட காலகெடுவான 28.01.2011 மற்றும் மின்வாரிய விதிகளின்படி அனுமதிக்கப்பட்ட 5 வருடங்கள் காலக் கெடுவான 28.01.2016 வரையிலும் தயார் நிலையை பதிவு செய்யவில்லை. ஆனால் உரிமம்தாரரின் தலைமை பொறியாளர்/திட்டமிடல் அவர்களின் 22.09.2009 நாளிட்ட அறிவிக்கையில் தயார்நிலை கடித அறிவிக்கையில் தெரிவித்துள்ள 90 நாட்களுக்கு பிறகு 5 வருடங்கள் முடிந்த பிறகு மனுதாரரின் விவசாய மின் இணைப்பு விண்ணப்பம் ரத்து செய்யப்படவேண்டுமெனவும், அவ்வாறு ரத்து செய்யப்பட்டதை மனுதாரருக்கு தெரியப்படுத்த வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட அறிவிக்கையின்படி எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளரின் விவசாய விண்ணப்பத்தை ரத்து செய்து மேல்முறையீட்டாளருக்கு தெரியப்படுத்தவில்லை. ஆகையால் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் உயிருள்ள நிலுவையில் உள்ள விண்ணப்பமாகவே கருதுகிறேன். மேலும் விண்ணபத்தை தற்போது ரத்து செய்தால் மறுபடியும் புதியதாக விண்ணப்பம் பதிவு செய்து மேலும் சுமார் 15 வருடங்கள் இலவச மின்சாரம் பெற மேல்முறையீட்டாளர் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படும். இத்ததைகய நடவடிக்கை ஒரு சாதாரண விவசாயிக்கு இழைக்கப்படும் அநீதியாகும். எனவே மேல்முறையீட்டாளரின் ரத்து செய்யப்படாத விவசாய விண்ணப்பம் நிலுவையில் உள்ளதால் மேல்முறையீட்டாளருக்கு தற்போது புதியதாக தயார்நிலை அறிவிக்கை கடிதம் கொடுத்து தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை விதியின்படி மேல்முறையீட்டாளரின் விண்ணப்ப பதிவு எண் 617/21.01.1991–க்கு இலவச மின் இணைப்பு வழங்குமாறு தீர்வு செய்கிறேன். மேற்கண்ட தீர்வு மேல்முறையீட்டாளர் திரு மண்ணாங்கட்டி அவர்களுக்கோ அல்லது அவரின் வாரிசுதாரருக்கோ மட்டுமே பொருந்தும்.

**10.0 <u>முடிவுரை:</u>**

10.1 பத்தி 9–இல் உள்ள தீர்வின்படி புதியதாக தயார் நிலை அறிவிக்கை கொடுத்து தற்போது நடைமுறையிலுள்ள தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி தேவைப்படும் ஆவணங்களை பெற்றுக்கொண்டு விவசாய விண்ணப்ப பதிவு எண் 617/21.01.1991–க்கு மின் இணைப்பு மேல்முறையீட்டாளருக்கு வழங்குமாறு தீர்வு செய்கிறேன். மேல்முறையீட்டாளர் ஆவணங்களை சமர்ப்பித்த தேதியிலிருந்து 30 நாட்களுக்கு மின் இணைப்பு வழங்குமாறு ஆணையிடுகிறேன்.

10.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 01/2022 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
**மின்குறைதீர்ப்பாளர்**

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

பெறுநர்

1. திரு. P. மண்ணாங்கட்டி,
த/பெ. பொன்னுசாமி,
சாராயக்கடை மேடு,
கடலூர் மெயின்ரோடு,
கண்ணாரம்பட்டு அஞ்சல்,
திருவெண்ணைநல்லூர் தாலூக்கா,
விழுப்புரம் – 607 203.

2. செயற்பொறியாளர்/ இ&ப/உளுந்தூர்பேட்டை,
கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
Ms தக்கா, உளுந்தூர்பேட்டை – 606 107.

3. மேற்பார்வை பொறியாளர், – By email
கள்ளக்குறிச்சி மின் பகிர்மான வட்டம்/தெற்கு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சிவாஜி நகர், லயன்ஸ் கிளப் பில்டிங்,
கள்ளக்குறிச்சி – 606 202.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், – By email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.